Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 17 } ஈரோடு, 19-8-1944 ஆவணி-மீ 4உ { மலர் 45

## சேலம் செயலாற்றும் காலம்!

"திராவிடநாடு", சேலம் மாநாட்டைப்பற்றி எழுதிய தலையங்கக் குறிப்புகள்:

தளபதி இரத்தினசாமி அழைக்கிறார், ஆர்வமும் அன்பும் ததும்ப! சேலம் வாரீர்! செந்தமிழ்த் தோழரே வாரீர்! சேரவாரீர்! என்று.

27—8—44ல், சேலம் நகரில், கண்காட்சிக்கொட்டகையிலே, ஜஸ்டிஸ்கட்சியின் மாகாண மாநாடு நடைபெற ஏற்பாடாகிவிட்டது. பெரியார் தலைமை வகிக்கிறார், தோள்தட்டி, மார்நிமிர்த்தி, அணியணியாக வருக! வருக! என்று, வரவேற்புக் கழகத் தலைவர், தோழர் இரத்தினசாமி கனிவுடன் திராவிடரை அழைக்கிறார்.

உறுதியும் உணர்ச்சியும் பெருக்கெடுத்தோடும் உள்ளம் படைத்த உத்தமவீரர்களே! உங்கள் நாட்டின் எதிர்காலம், இனத்தின் எதிர்காலம், எப்படி அமைதல்வேண்டும் என்பதை எடுத்துரைக்கச் சேலம் வாருங்கள்! செந்தமிழ்நாட்டின் படைஒலிகேட்டு ஆரியத்தின் ஓலம்கிளம்பட்டும், ஆங்கிலேயனின் அசிரத்தை அகலட்டும், நாடு மீளட்டும்.

ஆரியம் ஒழிந்தாகவேண்டும், இதிலே அபிப்பிராயபேதமில்லை! திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும், இதுவும் மறுக்கொணாததே! இதனைப் பெற எம்முறை சரி, எவர் வகுக்கும் வழி சிறந்தது, இதுவே பிரச்சினை.

ஆரியத் தளைகள் அற்று விழவேண்டும் என்று ஆண்மையுடன் கூறுகிறது. இந்த நிலைமை உண்டாக எந்த வழி சிறந்தது என்பதைச் சிந்தித்து, விவாதித்து சேர்ந்து ஆலோசித்துச், சித்தரிக்க வேண்டும், சேலம் வாரீர் என்று அழைப்பது அதன் பொருட்டே.

கவர்னர்களின் கைலாகு, பதவி மோகம், அரசியல் அதிகாரம் எனும் சம்பிரதாய அரசியல் முறைகள் சரியா, இவை எழுச்சி பெற, எதிரியின் சூழ்ச்சிகளை அழித்தொழிக்கும் பணி புரிவது சரியா, என்பது இன்றைய முக்கியமான பிரச்சினை.

காங்கரசும் முஸ்லிம் லீகும் காதல் மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்று, ஆச்சாரியார், பாணனாகும் நேரத்திலே, நாம் கூறுகிறோம். பாகிஸ்தானுக்கு இணங்கும் பார்ப்பனத் தலைவர், திராவிடநாடு விஷயமாகப் பாராமுகமாக இருப்பதைக் காண்கிறோம். எப்படி இருப்பினும், காங்கரசும் சர்க்காரும், திராவிடரின் இறுதி எச்சரிக்கையைக் கேட்டாகவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதைச் சேலம் எடுத்துக் காட்டியாகவேண்டும்.

போரிட ஒரு படை, பேரம் பேச ஒரு கூட்டம், மானம் ஒரு கூட்டம், ஆள ஒரு கூட்டம், கஷ்டநஷ்டத்துக்கு ஒரு கூட்டம், பட்டம் பதவிக்கு மற்றொன்று என்று இருக்குமானால், அந்த அமைப்பு ஒரு இனத்தை அடுத்துக் கெடுக்கும் சூழ்ச்சியாகவே இருக்கும். இந்நிலையிலே ஒரு இனம் சிக்கிக்கொண்டு இன்று தத்தளிக்கிறது.

1. ஆரியம் அழிவதற்கு ஒருவேலைத் திட்டம்.
2. திராவிடநாடு அமைக்க ஒருவழி:
3. கட்சியின் அமைப்பு முறையிலே புதுமுறுக்கு

ஆகிய இந்தக்காரியமற்ற, எந்த ஆற்றல் தேவை, புன்சிரிப்புடன்கூடிய ராஜதந்திரமா, புறமுதுகுகாட்டாத போர்வீரத் தன்மையா, என்பதை இளைஞர்களே! நன்கு சிந்தித்துப்பார்த்துச் சேலத்திலே கூறுங்கள்.

திராவிடர் (இயக்கம்) கழகம் என்று, இனி ஜஸ்டிஸ் கட்சியின் பெயரைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற யோசனை, சொல்மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, நாம் மேலே விளக்கியுள்ளபடி, இயல்பை மாற்றுவதற்கான முயற்சியே.

பாரீஸ் அழியாதிருக்கட்டும், பாமரர் சாகாதிருக்கட்டும், பகைவனின் கோபம் பாயாதிருக்கட்டும், என்ற நோக்கங்கொண்டதான் பெட்டெயின் (பெத்தாம்) எனும் பெருங்கிழவன், நாஜியின் அடி பணிந்தான், ஆனால் உலகு அவனை ஏளனம் செய்வதையே காண்கிறோம்: பெட்டெயினாகிப் பாரீசைக்காப்பாற்றுவதைவிட, தேசத்தைவிட்டு ஓடிப்படை தேடிய தெகால் (டிகாலே) சரிதப்புகழுக்குரியவர்! நமது பழமை, அதன் சின்னங்கள் என நாம் கருதும்படிச் செய்யப்பட்டு விட்ட, கலை, மதம், ஆகியவைகள் அழியக்கூடாது என்பதற்காக, ஆரியதாசராவது ஆண்மையா, அறிவுடைமையா, அவைகளை அழிப்பதே அறப்போர் என்ற உறுதியுடன் உரிமைப் போர் நடாத்துவது சரியா என்பதை வரையறுத்திடவாரீர் சேலம். தானி ஆள எது தேவை? தர்பார் உடையா, அல்லது தன்மான உணர்ச்சியா? வரலாறுகளை நினைவிலே கொண்டு வாருங்கள், பிறகு பதில் கூறுங்கள்.

சென்ற தேர்தலுக்குப் பிறகு, நடைபெற்ற பிரச்சாரம், கிளர்ச்சி, ஊட்டிய உணர்ச்சியும், வகுத்துக்காட்டியுள்ள வழியையும், மறந்திடுவது, செய்நன்றி கொன்றதாகும் என்று சிலர்கள் நிச்சயம் கூறுவர், நாம் அதனைமட்டுமே கூறவில்லை, அங்ஙனம் மறப்பது செய்நன்றி மறப்பது மட்டுமல்ல திராவிட இனம் உய்யும் வழியை இழப்பதுமாகும்.

இத்தச்சமயத்திலே, கட்சியினர் ஒவ்வொருவரும், கலங்காத உள்ளத்தோடு நின்றாகவேண்டும். கலாம்விளைவிக்கும் போக்கை மறக்கவேண்டும் அலையை அடக்க அருமையான திட்டம் இதோ என்று கூறி, அலைகடலைக்கிழித்துக் கொண்டு செல்லும் கலத்தை நிறுத்திப், பாறைமீது மோதும் நிலைமையைத் தெரிந்தோ தெரியாமலோ உண்டாக்காதிருக்க வேண்டுகிறோம். ஒருவர் இருவரின் சுகதுக்கத்தையோ புகழ்ச்சி இகழ்ச்சியையோ, வாழ்வு தாழ்வையோ, பொருட்படுத்துவது அல்ல இன்றுள்ள பிரச்னை அது அல்ப விஷயம்.

மனஉறுதியும் மையலை அடக்கும் திடமும் கொண்டவர்கள், தங்கள் இரத்தம் கீழே பெருகுவதைக்கண்டும் மருளாமல் செய்யவேண்டிய காரியம், மகத்தானது, ஆபத்தானது, ஆனால் செய்துதீரவேண்டிய காரியம். இக்காரியம் செய்ய, எது தக்கமுறை என்பதைத் தீர்மானிக்கும் முக்கியமான வேலை, உங்கள் முன் இருக்கிறது. அதற்கே சேலம் வாரீர் என்று அழைக்கிறார் அன்பர்.

பெரியாரின் பேருரையும், மற்றத் தலைவர்களின் சொற்பெருக்குகளும், சம்பிரதாயப் பேச்சுகளாக இரா! போர்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாடு

## தோழர் ஜி. எ. சின்னு அவர்கள் தலைமையுரை

ஈரோட்டில், 5, 6-8-44ல் கூடிய தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாட்டின் தலைவர் தோழர் G. A. சின்னு, F. C. E.; R. I. M. P. அவர்கள் ஆற்றிய தலைமைப் பேருரை:

வரவேற்புக்கமிட்டித் தலைவரவர்களே, சகோதரிகளே, சகோதரர்களே!

நாகரீக உலகத்தில் ஒரு சிறு பகுதியினருக்கே சித்த வைத்தியத்தின் அருமை தெரியும். தெரிந்தவர் போற்றுகின்றார்.

ஆங்கிலம் படித்தவரும் ஆங்கில வைத்தியருமாகிய ஆலோபதி வைத்திய நிபுணர்களில் அநேக தமிழ் ஆங்கிலோ வைத்தியர்கள் சித்த வைத்தியமென்றால் என்ன! "ஓ! நாட்டு வைத்தியம்தானே, நாட்டு வைத்தியர்தானே" என்று எள்ளி நகையாடுவதையும் கேட்டிருக்கிறேன். சீவன் இக்கூட்டை விட்டகலா வண்ணம், பஞ்ச பூதங்களாலமைந்த இக்கூட்டை நெடுங்காலம் அழியாமல் வைத்திருக்க கண்ட முறையே சித்தவைத்தியமாகும். ஏனைய வைத்தியங்கள் அங்ஙனமன்று. வந்த வியாதிகளை விலக்க வழி தேடுபவை. இவ்வைத்தியத்தை எள்ளுவதும், இது அநாகரீகமானதெனவும் சாஸ்திரோக்தமற்றதென்றும், டாக்டர் கிருஷ்ணன் போன்ற பல நாகரீக இந்திய மேதாவிகள் ஆங்கில வைத்திய மாநாடுகளில் போய் நம் வைத்தியத்தை நகையாடுவதென்றால் நாம் எவ்வளவு கேவலப்படுத்தப்படுகிறோம் என்று எண்ணிப்பாருங்கள். பஞ்ச பூதங்களின் இயற்கை செயற்கை என்றால் என்ன என்று தெரியாத இந்நாகரீக மேதாவிகள் பஞ்ச பூதங்களையே இகழ்கிறார்கள். திரிதோடங்களை அறியாத இம்மகா மேதாவிகள் ஒரே நாம்பில் மூன்று நாடிகள் எவ்விதம்வரும் என்று நம்மைத் தானே தாக்குகின்றனர். உப்பு வகைகளையும் உலோகங்களையும் ரஸகெந்தக பாஷாணங்களையும் பஸ்ப சிந்தூர சுன்னமாக்கும் திறமை வாய்ந்த நம்மை பரிகசித்து வந்த ஆலோபதி நிபுணர்கள் இப்பொழுதுதான் உலோகங்கள் உடம்பிற்கு நன்மை பயக்குமென்பதை Gold injection என்று இப்பொழுது பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள்.

சுன்னங்களின் பெருமையை நாம் வெகு காலத்திற்கு முன்பே அறிந்திருக்கிறோம். இப்பொழுதுதான் Calcium Therapy என்று பறை சாற்றுகிறார்கள். நாடி நிதானம் நம்மிடம் கற்றுக் கொண்டால் எவ்வளவோ நன்மை பயக்கும். 4440 வியாதிகளையும் 8200 காப்புகளையும் தெரிந்த சித்த வைத்தியரை Anatomy Physiology தெரியாதவரென்றால் இது பெரிய கேலிக்கூத்தாகும். இப்படி நம்மை உதாசீனம் செய்வதற்கும் நாம் இவ்வளவு தெரிந்தும் குடத்திலிட்ட விளக்கு போலிருப்பதற்கும் காரணம் என்ன? இவ்வைத்தியம் சிதைந்து சீர்கேடாய்ப் போவதை தவிர்ப்பது எங்ஙனம்? அதற்கே நாம் கூடியிருக்கிறோம். சித்தர்களால் வெளியிடப்பட்டுள்ள நூற்களிலுள்ள முறைகளை முறை பிசகாமல் தேர்ந்தறிந்து செய்தாலே போதும். அதற்கு பணச் செலவும் காலச் செலவும் தேவையில்லை.

128 வர்மஸ்தானங்களை மனித உறுப்புகளில் கண்டறிந்து அவ்வர்மங்களைப் பிரயோகித்து அனுபவம் செய்த பெரியோராகிய சித்தர்களை இனியாவது அவர்க்குரிய பெருமையுடன் நடாத்தக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆயுத (ஸஸ்திர சிகிச்சை) தெரியாது என்று சொல்லுபவர்கள் சஸ்திர சிகிச்சை இல்லாமலே வியாதிகளைத் தீர்க்கும் முறையாகிய சித்த வைத்தியத்தின் பெருமையை உணர்தல் அவசியம். தேரையரின் வரலாறு என்ன என்று தெரிந்து கொண்டால் இவ்வாறு பிதற்றமாட்டார்கள்.



தோழர் ஜி. ஏ. சின்னு அவர்கள்

### நாம் உடனே கவனிக்கவேண்டியவை என்ன?

புனருத்தாரணத் திட்டங்கள் வகுக்கும் இத்தருணத்தில் நம் வைத்தியம் முன்னேற திட்டம் வகுத்தல் அவசியம்.

இந்தியாவிலுள்ள சுகாதார வைத்திய நிபுணர்கள் கொண்ட Bhore Committee என்ற ஒரு கூட்டம் இதை ஆராய்ந்து வருகிறார்கள். நம் நாட்டின் சுகாதார சிகிச்சைகளை தீர்ப்பதற்கு அயல்நாட்டாருக்கு இருக்கும் அக்கறை கூட நமக்கில்லையேயென்று நான் விசனிக்கிறேன். இக்கமிட்டியில் இந்திய நாட்டு வைத்தியர்களுக்கோ இந்திய வைத்தியத்திற்கோ இடமில்லையென்பது மிகவும் விசனிக்கத்தக்கது. ஆதலால் இக்கமிட்டியின் சிபார்சுகளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். நம்மைப் புறக்கணித்ததின் காரணம் நம்மைப் பற்றி வெளியுலகத்திற்கு போதுமானபடி நாம் அறிவித்துக் கொள்ளாததும், அதிகார வர்க்கத்தினர் நம்மைப் புறக்கணித்து தள்ளிவிட்டதுமேயாகும். நம்மில் ஒரு நிரந்தரக் கமிட்டியும் பொது மத்திய ஸ்தாபனமும் இல்லாத குறையே இதற்குக் காரணம் என்பது நீங்கள் உணர்தல் வேண்டும். நானும், என் சகாக்களும் அடிக்கடி ஒவ்வொரு மேடையிலும், கூட்டத்திலும், மாநாட்டிலும் இம்மத்திய ஸ்தாபனத்தின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தியும் நமது சகோதரர்கள் அதற்கான திட்டங்களுடன் முன்வர முடியவில்லை. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வோர் ஸ்தாபனம் சங்கம் இருப்பது மிகவும் அவசியம். ஆனால் பொது நன்மையை உத்தேசித்தும், மத்திய (Central) ஸ்தாபனமும் அந்த மத்திய ஸ்தாபனத்துடன் ஏனைய சங்கங்கள் ஜில்லா, தாலூகா வாரியாக தொடர்பு வைத்துக்கொண்டு காரியங்களை நடத்திவந்தாலொழிய, நாம் எதுவும் உருவாகச் செய்ய முடியாது என்பதை மறுமுறையும் வழுத்துகிறேன்.

Anatomy, Physiology நன்றாய் கற்றுக்கொள்ள வேண்டும். அதை நாம் புறக்கணிப்பது அறிவீனம். நம் பழங்கதைகளைப் பேசி பிரயோஜனமில்லை. இக்காலத்துப் பழக்கவழக்கங்களையும், தற்காலத்திய நாகரீகம், படிப்பு முதலியவைகளையும் அனுசரித்து நாமும் நடப்பதே முறை.

மதுரையில் 1938-ம் வருடத்தில் நடந்த சித்த இந்திய வைத்திய காங்கரஸில் என் வரவேற்புரையிலும், 1942-ம் வருடத்தில் கும்பகோணம் சித்தவைத்திய மாநாட்டின் தலைமைப் பேருரையிலும் இவ்விஷயங்களை நான் கூறியுள்ளேன்.

நாம் ஒன்றுகூடி இரைச்சலிட்டாலொழிய சர்க்கார் நம்மைக் கவனிக்கமாட்டார்கள். 28—6—42 கும்பகோணத்தில் நாம் கூடி கூச்சலிட்டதின் பலன் Registration என்ற பதத்தை காப்பாற்றியது. இல்லையேல் இன்று நமது கதி என்ன ஆயிருக்குமென்று சற்று தெளிந்து பாருங்கள். Bhore கமிட்டியின் சிபார்சில் முக்கிய அம்சம் ஒவ்வொரு 5 மைலுக்கும் ஒரு ஆங்கில வைத்திய ஆஸ்பத்திரி ஸ்தாபனம் செய்வதும், ஆங்கில வைத்தியமுறை கற்றவர்களுக்கு வேண்டிய அவகாசம் கொடு

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

# திராவிடஸ்தான் பிரச்சினை

## பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் தகராறு

### மாஜி மந்திரி ராமநாதன் பேச்சு

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சென்ற 11-ஆம் தேதி நடந்த கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாஜி காங்கரஸ் மந்திரி தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் பேசுகையில் சி. ஆர். திட்டத்தைக் குறித்தும், திராவிடஸ்தான், பாகிஸ்தான் பிரச்சினைகளைக் குறித்தும் பேசியதின் குறிப்புகள் வருமாறு:-

"சி. ஆர். திட்டம் பூர்த்தியானதல்ல. இது ஒரு அடிப்படைத்திட்டமாகத்தான் உதவும். இத்திட்டம் முஸ்லிம்கள், சீக்கியர்கள் கோரிக்கையை மற்றும் கவனித்தால் போதாது. திராவிடர்கள் கோரும் தனிமாகாணம்-திராவிடஸ்தான் கோரிக்கையை கவனிக்கவேண்டும்.

திராவிடஸ்தான் பிரச்சினை இந்து—முஸ்லிம் பிரச்சினையைவிட குறைந்ததல்ல. இதுவும் அவசரமாகவும் அவசியமாகவும் கவனிக்கப்படவேண்டியதாகும்.

வட இந்தியாவில் இந்து—முஸ்லிம் தகராறு வானமளாவ முட்டி விட்டது. அதுபோலவே திராவிடர் பிரச்சினையும் இருந்து வருகிறது.

காங்கரசிலும் காங்கரஸ் கமிட்டியிலும் எனக்கு நல்ல அனுபவம் உண்டு. இந்து—முஸ்லிம் பிரச்சினை எவ்வளவு தீவிரமாயிருந்துவருகிறதோ அதுபோல பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினையும் தீவிரமானதாயிருந்து வருகிறது.

நாம் சுதந்திரம் அடையாவிட்டால்—நமது நாடு சுதந்திரம் பெறாவிட்டால் நம்நிலை என்னாகும் என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். நாம் முழு மனிதராகவே வாழ முடியாது. அரை மனிதராகவே வாழவேண்டிவரும். நாம் ஐக்கியமாக ஒன்று சேர்ந்து வாழ்ந்தாலும் இந்நிலையில்தான் நாம் இருப்போம்.

ஆகவே இன்று நம் முன்னுள்ள பிரச்சினை ஐக்கியமாக இருந்து அடிமையாக என்றும் இருப்பதா அல்லது பிரிந்து சுதந்திரமாக இருப்பதா என்பதுதான்.

ஐக்கியம் என்பதினால், என்றும் அடிமையாக இருக்கவேண்டிய ஆபத்து இருந்து வருகிறது என்பதை உணர்ந்து ஐக்கியம்—ஒற்றுமை யென்ற பேச்சை மறந்து அஹிம்சை என்ற போலிக் கூச்சலை விலக்கவேண்டும்.

சர்வஜன வோட்டு எடுக்கும் விஷயத்தில் இந்துமகாசபை, கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், பார்ப்பனரல்லாதார் அல்லது ஜஸ்டிஸ் கட்சி ஆகியவைகளை மறந்துவிட முடியாது. அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும்.

# அண்ணாதுரை தீர்மானம்

## சேலம் மாநாட்டுக்கு தோழர் அண்ணாதுரை அடியில்கண்ட தீர்மானத்தை அனுப்பியிருக்கிறார்.

1. கால நிலைமையையும், உலகப்போக்கையும், சர்க்கார் நிலைமையையும், நம்மக்கள் தன்மையையும், இதுவரை நாம் நடந்து வந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும், அதனால் உண்டான பலனையும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் நிலைமையும், அதனால் அவைகளுக்கு ஏற்பட்ட பலனையும் நன்றாக ஜாக்கிரதையாக ஆலோசித்துப் பார்த்தால் நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நம் கட்சியின் தன்மானத்தைக்கோரியும் நமது கட்சியின் போரால் இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக்கொண்டு போகப்பட்டு விட்டோம்.

அதாவது,

நம் ஆட்சி தோன்றிய காலம் முதல் இதுவரை நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து வந்ததும், சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்கு தொல்லை கொடுத்து வந்த ஸ்தாபனங்களை எதிர்த்துப் போராடி சர்க்காருக்கு அனுகூலமான நிலைமையை உண்டாக்க உதவி செய்து வந்ததும், குறிப்பாக சென்ற ஐந்து வருஷகாலமாக நடந்துவரும் உலக யுத்தத்தில் நல்ல நெருக்கடியில் நேசநாடுகளின் வெற்றிக்கு கேடு உண்டாகும்படியான நிலையில் நம்நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்துவந்த பெருங்கிளர்ச்சிகளையும் நாசவேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும் நேசநாடுகளுக்கு வெற்றி உண்டாக பணம், ஆள், பிரசாரம் முதலியவைகள் நிபந்தனையின்றி சர்க்காருக்கு உதவி வந்ததும் சர்க்காராலும் பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத்தக்க நிலை ஏற்படுவதற்கு பயன்பட்டு விட்டது.

இந்திய அரசியல் சமூக இயல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சர்க்காரார் நம் கட்சியையும், நம் இலட்சியமாகிய திராவிடநாட்டுப்பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

இந்திய மக்களின் அரசியல் சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் குறிப்பிடத்தக்கதாகவும், கீர்த்தி உடையதாகவும் இருந்து, ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் மெச்சும்படி நடந்துவந்தும், நம் ஸ்தாபனம் சர்க்காரரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக்கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக அலட்சியப் படுத்தப்பட்டது.

மாகாண கவர்னராலோ, கவர்னர் ஜனரலாலோ, இந்திய மந்திரியாலோ, பிரிட்டிஷ் முதல் மந்திரியினாலோ, இந்திய அரசியல் கட்சிகளைப்பற்றி பலதடவை பேச ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்று இரண்டுதடவைகூட நம் சமுதாயத்தையோ நம் ஸ்தாபனத்தையோ நம் இலட்சியத்தையோ குறிப்பிட கட்டுப்பாடாய் மறந்தே வரப்பட்டிருக்கிறது.

ஆகவே இப்படிப்பட்ட நிலைமை மாறி நம் கட்சிநிலை மதிக்கப்படவும் குறிப்பிடவும் மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படவும், நம் கட்சி இனியும் கட்டுப்பாடும் உறுதியும் பெற்று உண்மையான தொண்டர்களைக் கொண்டு நாணயமாயும் தீவிரமாயும் தொண்டாற்றி மதிப்புப் பெறவும் நல்ல வசதியும் சவுகரியமும் ஏற்படுவதற்கு நம் கட்சிக்கு அடியில்கண்ட திட்டம் உடனே அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டியது அவசியமும் அவசரமும் ஆன காரியமாகுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

அ. நம் கட்சியில் இருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்துசேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரரால் தங்களுக்கு அளிக் [illegible] பட்டங்களையும் உடனே [illegible]

காருக்கு வாபசு செய்துவிடவேண்டும், இனி ஏற்றுக்கொள்ளவும் கூடாது.

ஆ. அதுபோலவே அவர்கள் யுத்தத்திற்கு ஆகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்கு ஆகவும், மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்காராலோ ஏற்படுத்தப்பட்ட கமிட்டியில் எப்படிப்பட்ட ஸ்தானம், அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டிருந்தாலும் அவைகளை யெல்லாம் உடனே இராஜிநாமாச் செய்துவிட வேண்டியது.

இ. தேர்தல் அல்லாமல் ஸ்தலஸ்தாபனம் அதாவது ஜில்லா போர்டு, முனிசிபல் சபை, பஞ்சாயத்து போர்டு ஆகியவைகளின் தலைவர் உபதலைவர் அங்கத்தினர் ஆகிய பதவிகளில் சர்க்காரால் நியமனம் பெற்ற அல்லது நியமனம் பெற்ற அங்கத்தினர்களால் தேர்தல் பெற்றோ இருக்கிறவர்கள் யாவரும் தங்கள் தங்கள் பதவிகளை உடனே இராஜிநாமாச் செய்துவிட வேண்டியது.

ஈ. சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்தவிதமான தேர்தலுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக்கூடாது.

இதைபேற்று ஒரு வாரத்தில் இதன்படி கட்டுப்பட்டு நடக்காதவர்கள் எவரும் தங்களுக்கு இக்கட்சியில் இருக்க இஷ்டமில்லை என்று கருதி கட்சியை விட்டு நீங்கிக்கொண்டவர்களாகக் கருதப்பட வேண்டியவர்களாவார்கள்.

## ரேடியோ ஆராய்ச்சிக்கு நன்கொடை

தோழர் ஜி. டி. நாயுடு தாராளம்

ஆந்திரா யூனிவர் சிட்டியில் ரேடியோ ஆராய்ச்சி ஸ்காலர்ஷிப்பை ஏற்படுத்துவதற்காக கோயமுத்தூர் யுனைட்டெட் மோட்டார் கம்பெனியின் மானேஜிங் ஏஜண்டாகிய தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் 10,000 ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார் என்பதைக் கேட்டு அவருடைய தாராள சிந்தைக்கு அவரைப் பாராட்டுகிறோம்.

## பன்னீர் செல்வம் உதயம்

திருப்பூர்: செருப்பெரிச்சல் தோழர் எ. அர்த்தநாரி மனைவிக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. அக்குழந்தைக்குப் பன்னீர்செல்வம் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இதன் அறிகுறியாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## விதவை மணம்

தூத்துக்குடி: மேல சண்முகபுரம் ஜஸ்டிஸ் வாலிபர் சங்கத்தின் சார்பாக 5-8-44 தேதி தோழர் என். சுப்பையா தலைமையில் மேற்படி சங்க அங்கத்தினர் தோழர் பொன்னையா அவர்களுக்கும் தங்கபூ அம்மாளுக்கும் விதவை திருமணம் (மறுமணம்) வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் சி. பெரியசாமி ச. குருசாமி, த. துரைசாமி முதலிய தோழர்கள் விதவை திருமணத்தின் அவசியத்தைப்பற்றிப் பேசினார்கள்.

## மறைவு

சக்காரிகல்லூர்: சிறந்த சீர்திருத்தக்கார தோழர் கல்லல் "ருக்மணி" அடிகளார் 8-8-44 பெரம்பலூர் தாலூகா முருக்கங்குடியில் இயற்கை எய்தினார். அன்னாரின் நினைவு நாள் 24-9-44 ஆம் தேதி முருக்கங்குடியில் கொண்டாடப்படும்.

## "திராவிடநாடு"

13-8-44 ஆம் தேதிய 'திராவிடநாடு' இதழில், சில அசௌகரியங்களை முன்னிட்டு 20-8-44 ஆம் தேதிய இதழ் வராது என்று வெளியிட்டிருந்தோம். ஆனால், மாநாட்டின் அவசியத்தை முன்னிட்டு 4 பக்கங்களுடனே வெளியிட முடிவு செய்து விட்டோம். எனவே, ஏஜண்டுகள் வழக்கம் போல் 'பார்சல்'களை எடுத்துக் கொள்ளவேண்டுகிறோம்.

மானேஜர், "திராவிடநாடு"

## திராவிடநாடு பிரிவினை மாநாடு

திராவிடநாட்டு பிரிவினை மாநாட்டை அடுத்த வாரத்தில் கூட்டுவதென தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தோழர் எஸ். வி. லிங்கம் சேலத்திலிருந்து தெரிவிக்கிறார்.

## சேலத்தில் நூற்பஞ்சம்

சேலம்: 10-8-44ந் தேதி நடைபெற்ற சேலம் அரிசிப்பாளையம் கைத்தறி நெசவாளர் சங்க கமிட்டிக்கூட்டத்தில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காமல் தொழில் நின்று போயிருப்பதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இரண்டாந்தடவை தெரிவிப்பது என்றும் தேவைப்படும் நூலை இக்கமிட்டிமூலம் சப்ளை செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

## சேலம் தொண்டர் படை

சேலம்: தொண்டர்படைக் கூட்டம் 20-8-44 காலை 10 மணிக்கு சுயமரியாதைச் சங்கத்தில் நடைபெறும். அது சமயம் எல்லாத்தொண்டர்களும் வரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். மாநாடு 27-8-44ல் நடைபெறுவதால் வெளியூர் தொண்டர் படையினர் 26-8-44ந் தேதி இரவு 8 மணிக்குள் சுயமரியாதைச் சங்கத்தில் வந்து சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் என திருவாரூர் டி. எஸ். இராஜகோபால் தெரிவிக்கிறார்.

## இரண்டாவது தமிழர் திருமண மாநாடு

இரண்டாவது தமிழர் திருமண மாநாடு அடுத்த திங்களில் காஞ்சிபுரத்தில் கூடும். இடமும் காலமும் பின்னர் அறிவிக்கப்படும். இம்மாநாட்டை யொட்டிய வரவேற்புக் கழகக் கூட்டம் ஒன்று 20-8-44 ஞாயிறு அன்று காலை 10மணிக்கு காஞ்சியில் கூடும்.

## நாகை நாடகம் ஒத்திவைப்பு

நாகையில் 28-8-44-ந் தேதி நடக்கவிருந்த "அன்பானந்தன் அல்லது சமூக வெற்றி (போர் வாள்)" என்ற நாடகம் செப்டம்பர் 10-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

## அறிவிப்பு

'உழைப்பாளிகளுக்கு என் இவ்வுலகமில்லை' யென்ற புத்தகம் வந்துவிட்டதால் இனி யாரும் தயவுசெய்து அனுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

## திருவாரூரில் சந்திரோதயம்

திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் 18-8-44-ல் வெள்ளி இரவு 10-30 மணிக்கு பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் காஞ்சி திராவிட நடிகர் கழக தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள்கோஷ்டியாரால்

சந்திரோதயம்

என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

## சேலம் ஜஸ்டிஸ் மாநாடு

சேலம், ஆக. 13—

ஜஸ்டிஸ் (S. I. L. F.) மாகாண மாநாட்டின் வரவேற்புக்கழகக் கூட்டம் சேர்மன் தோழர் பி. ரத்தினசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் இன்று கூடிற்று. வெளியூர் பிரதிநிதிகளின் சௌகரியத்தை முன்னிட்டு விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் பந்தலில் ஜஸ்டிஸ் மாநாட்டை 27-8-44 ஆம் தேதி நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. இனி எக்காரணத்தை முன்னிட்டும் மாநாடு ஒத்தி வைக்கப்படமாட்டாது.

மாநாட்டை 3 நாள் நடத்தலாமா என்றும் யோசிக்கப்பட்டது. உணவுக்கஷ்டத்தை முன்னிட்டு மாநாட்டை ஒரே நாளில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. தொண்டர்படைக்கும் விளம்பரத்திற்கும் பணம் ஒதுக்கப்பட்டது. விளம்பர விஷயமாக காரியதரிசி தோழர் சி. ஜி. நெட்டோ அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தோழர்கள் எஸ். வி. லிங்கம், சைமன் ராமசாமி, எஸ். பி. ரங்கசாமி பிள்ளை முதலியவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள்.

• •

தலைவர்: பெரியார் ஈ.வெ. ராமசாமி; திறப்பாளர்: பி. ஆ. பெ. விசுவநாதம்; கொடியேற்றுபவர்: பி. பாலசுப்பிரமணியம், ஆசிரியர் 'சண்டே அப்சர்வர்'; திராவிட நாடு படத்திறப்பாளர்: சி. என். அண்ணாதுரை; பன்னீர் செல்வம் படத்திறப்பாளர்: டாக்டர் எ. கிருஷ்ணசாமி; வரவேற்புக்கமிட்டி டிக்கட் ரூ. 25, ரூ. 10, ரூ. 5; பிரதிநிதி டிக்கட் ரூ. 2; பார்வையாளர் டிக்கட் அணா 0-4-0 என்று வரவேற்புக்கமிட்டித் தலைவர் தோழர் பி. இரத்தினசாமி பிள்ளை அவர்களும் காரியதரிசிகள் சி. ஜி. நெட்டோ, எ. க[illegible]ணச சங்கரன் ஆகியவர்களும் [illegible]சிவிக்கின்றனர்.

மதுரை: 13-[illegible] ஆம் தேதி தெ. இ. ச. உ. சங்க[illegible]ட்டத்தில் தோழர் செதின் அவர்கள் [illegible]லைமையில் வாலி பரும் வருங்காலமு[illegible]ம் பொருள் பற்றிப் பலர் பே[illegible]ர்.

பறக்கும் குண்டுகளும், ஜப்பானியரின்
கொடுமைகளும் நிறைந்த இந்தப்போரில்

**செஞ்சிலுவை**

மனித சமுதாயத்திற்காக பாடுபடுகிறது:
நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும் காப்பாற்றுகிறது.
யுத்தக் கைதிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

எனவே

**"செஞ்சிலுவைக்காக"**

என்ற தலைப்பில்

**மே. த. கவர்னரின்**

**யுத்த நிதிக்கு**

பண உதவி செய்து

**ஒரு சிறந்த காரியத்திற்கு உதவி புரியுங்கள்.**

தூத்துக்குடி: சண்முகபுரம் பிரப்பர் ச. டி. பன்னீர் செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்திற்கு 1944—45 வருடத்திற்கு புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்தல் 23-7-44ந் தேதி தோழர் எம். சடலைமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பே. வ. த. ரத்தினசாமி அவர்களைத் தலைவராகவும், எஸ். முத்துசாமி செயலாளராகவும், மற்றும் பலர் நிர்வாகத்திற்கும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

• •

தாராவி பம்பாய்: கேசவா சமுத்திரம் ஆ. தி. முன்னேற்ற வீதின் 4-வது மாதாந்திரக் கூட்டம் எஸ். என். நடேசன் தலைமையில் 15-7-44ம் தேதி நடந்தது. தோழர்கள் ஆறுமுக நாயகம், பெருமாள் முதலியவர்கள் பேசினார்கள்.

• •

திண்டிவனம்: திருவள்ளுவர் தமிழ்க் கழகத்தின் பொதுக் கூட்டம் தோழர் அப்பாண்டைநாதன் தலைமையில் 22-7-44-ஆம் தேதி கன்னியம் கிராமத்தில் நடந்தது. தோழர்கள் வீர அரக்கனார், க. இராமமூர்த்தி, பெ. புருஷோத்தமன் முதலியவர்கள் பேசினார்கள்.

• •

பம்பாய்: காங்குரேரி தாதுலா ஆதி திராவிட மகாஜன சங்கத்தின் முதல் கூட்டம் 6-8-44-ஆம் தேதி தோழர் எம். ஆர். சுதாசன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் விதிகளும் நோக்கமும் நிறைவேற்றப்பட்டது.

• •

அந்தணப்பேட்டை: 7-8-44-ம் தேதி திராவிடர் கழகத்தின் ஆதரவில் தோழர் திருவாரூர் பி. எஸ். யாக்கூபு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'நாட்டுப் பிரிவினை' என்பது பற்றி பல தோழர்கள் பேசிய பின் எம். எஸ். அலாவுதீனால் வந்தனம் கூறப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

1944-ஆம் ஆகஸ்டு-மீ 19-உ

# காந்தி ஜின்னா சந்திப்பு

காந்தியார் தனது நண்பர் இராஜகோபாலாச்சாரியாருடன் ஜின்னா சாயபைச்சந்திக்க 19 ஆந்தேதி சனிக்கிழமை பன்று புறப்படுவதாக சேதி வந்திருக்கிறது.

இவர்கள் மூவரும் சந்திப்பதும் சந்தித்துப் பேசுவதும் அப்பேச்சினால் ஏதாவது பயன் (ஏற்படாது) ஏற்பட்டால் அப்பயனும் சரித்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு முக்கிய சம்பவமேயாகும்.

ஆனால் இவர்கள் மூவர்களும் தங்கள் சொந்த அபிப்பிராய பேதங்களைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வருவதற்காக கூடிப்பேசப் போகிறார்களா? அல்லது இந்திய நாடு முழுவதையும்பற்றியும் இந்திய மக்கள் என்னும் மக்கள் அத்தனை பேருக்கும் பிரதிநிதிகளாகவோ, அத்தனை பேரையும் பொறுத்த விஷயத்தைப்பற்றியோ பேசப்போகிறார்களா? என்பது ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள ஆசைப்படும் விஷயமேயாகும். இந்த நிலையில் ஜின்னா சாயபு விஷயம் சற்று தெளிவாய் இருக்கின்றது என்றே சொல்லலாம். ஜின்னா சாயபு தன்னை முஸ்லிம் சமுதாயத்துக்கே பிரதிநிதி என்று சொல்லுகிறார். சொல்லுவதோடு அந்தப்படி அதாவது தன்னை முஸ்லிம்களின் பிரதிநிதி என்று ஒப்புக்கொண்டவர்களிடம் தான் தனக்குப் பேச்சு வார்த்தைஉண்டு என்றும் கூறுகிறார். சற்றேக்குறைய முஸ்லிம்களும் மற்றப் பொதுமக்களும் ஜின்னாவை அப்படியே கருதி இருக்கிறார்கள்.

காந்தியாரும் ஆச்சாரியாரும் யார் சார்பாக, எவர்களின் பிரதிநிதியாக, எந்த ஸ்தாபனத்தின் பெயரால் ஜின்னாவிடம் செல்லுகிறார்கள் என்பதும், ஜின்னா சாயபும் இவர்களை யாருடைய பிரதிநிதியாக எந்த ஸ்தாபனத்தின்சார்பாக வரவேற்றுப் பேசப் போகிறார் என்பதும் நமக்கு விளங்கவில்லை. ஆதலால் இவர்கள் மூவர்களுக்குள் ஏதாவது ஒரு பேச்சு நடந்து ஒரு முடிவு பெறுமானாலும் அந்த முடிவுக்கு ஜின்னா சாயபு தான் கட்டுப்பட்டு ஆகவேண்டுமே ஒழிய, ஜின்னா சாயபுதான் தாம் ஒப்புக்கொண்ட விஷய நிபந்தனைகளின்படி ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்டு நடந்தாகவேண்டுமே ஒழிய காந்தியாரும், ஆச்சாரியாரும் ஒப்புக்கொண்ட விஷயத்திற்கு எந்த விதமான உறுதியும் ஜவாப்தாரித்தனமும் இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

ஏனெனில்,

1 காந்தியார் காங்கரஸில் ஒரு நாலணா மெம்பராகக்கூட இல்லை, தன்னை காங்கரஸ் மெம்பரென்று சொல்லிக் கொள்ளுவதுமில்லை.

2 ஜின்னாவிடம் ஒப்பந்தம் பேச காங்கரசாரின் அனுமதியும் காந்தியாருக்கு இல்லை.

3. அன்றியும் வேறு ஏதாவது விஷயத்தில் காந்தியாருக்கு காங்கரஸ் அனுமதி இருந்தாலும் அந்த அனுமதியும் தாம் சிறைபட்ட உடனே தானாக (கேன்சல்)செல்லுபடி அற்றதாக ஆகிவிட்டதாக சொல்லிவிட்டார். அப்படி ஏதாவது காங்கரஸ் சார்போ அனுமதியோ இருப்பதாக ஜின்னா சாயபு கருதினாலும் இந்தியாவில் காங்கரஸ் முஸ்லிம்லீக் என்கின்ற இரண்டே கட்சிகள் மாத்திரம் இல்லை. காந்தியாரையோ, காங்கரசையோ ஒப்புக்கொள்ளாத மக்கள் காங்கரசைவிட அதிகமான எண்ணிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். சீக்கியர், பார்சி, இந்துக்கள், திராவிடர்கள், தீண்டப்படாத மக்கள் முதலாகிய பல சமூகத்தார்களில் முழுவதும் பெரும்பாதும் காங்கரசையும் காந்தியாரையும் தங்களுக்கு பிரதிநிதித்துவமாக ஏற்றுக்கொள்ளாமல் தங்கள் தங்கள் இனம், சமுதாயம், ஜாதி, சமயம் பேரால் தனித்தனிஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டு தனி அபிப்பிராயம் சொல்லுவதோடு காங்கரசையும் காந்தியாரையும் சிலர் எதிர்க்கவும் செய்கிறார்கள்.

மகாஜனம் என்றும் மற்றும் சர்க்காரால் மதிக்கப்பட்டவர்கள் என்றும் இந்தியாவைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கத் தகுந்தவர்கள் என்றும் பெருமையாய் பேசப்பட்ட பல பெரியார்களும் இந்த குறிப்பிட்ட அபிப்பிராயத்தை அதாவது ஜின்னா-காந்தி சந்தித்துப் பேசப்போகும் பிரச்சினையை எதிர்க்கிறார்கள்.

டாக்டர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் விஷயமும் கிட்டத்தட்ட இதுபோன்றதேயாகும். அதாவது ஆச்சாரியாரும், காங்கரஸ் மெம்பர்கூட அல்ல; அதோடு மாத்திரமல்லாமல் ஆச்சாரியார் மீது காங்கரஸ் ஸ்தாபனம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தபிறகு இராஜினாமா கொடுத்தவர்; அனேக காங்கரஸ் ஸ்தாபனங்களால் கண்டிக்கப்பட்டவர்; சென்ற இடங்களில் எல்லாம் முகத்தில் கரி பூசிக்கொண்டும் இகழ்ச்சி பெற்றுக்கொண்டும் வந்தவர். இந்த நிலையில் இவ்விருவர்களிடம் பொறுப்பும் கட்டுப்பாடும் கட்டுப்படவேண்டிய நிபந்தனையும் உள்ள ஜின்னா சாயபு பேசுவதில், அப்பேச்சு பயன்பெற என்ன ஜாமின் இருக்கும் என்பது விளங்கவில்லை.

இது ஒருபுறம் இருக்க, காந்தியார் தாம் ஜின்னாவோடு பேசுவதில் பாகிஸ்தான் விஷயமாக குறிப்பிடும் நிபந்தனைகளில் இரண்டு நிபந்தனைகள் குறிப்பிடத்தக்கவைகளாகும் அவையாவன:

ஒன்று,

ஜின்னா சாயபு பாகிஸ்தானுக்கு பாகிஸ்தான் பிரதேசத்தில் பொது ஜன ஓட்டு எடுக்க வேண்டும் என்பது.

இரண்டு,

பேச்சில் ஒரு முடிவு ஏற்பட்டால் அந்த முடிவின் பயனாய் ஏற்படும் தேசிய சர்க்கார் சட்டசபையில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களைக்கொண்டு தேசிய சர்க்கார் அமைக்கப்பட வேண்டும் என்பது.

ஓட்டு எடுத்து, ஓட்டுப்படி நடப்பதானால் காந்தி-ஜின்னா பேச்சு வார்த்தையோ சமாசமோ ஒப்பந்தமோ தேவை இல்லை என்றே சொல்லுவோம். ஜனநாயக சர்க்கார் இருந்து எந்த விஷயத்தையும் ஓட்டுப்படி நிர்மானித்துவிடும். ஆனால் ஓட்டு எப்படி இருந்தாலும் என் இஷ்டப்படிதான் நடக்க வேண்டும் என்கின்ற பிரச்சினை

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

கள் ஏற்படுவதால்தான் ராஜி பேச வேண்டியிருக்கிறது.

ஓட்டு என்பதும், ஜனநாயகம் என்பதும் கூட ஒரு இனம், ஒரு சமயம், ஒரு ஜாதி, ஒரு இலட்சியம் கொண்ட மக்களிடையில் ஓட்டு எடுத்தால்தான் அந்த ஓட்டு மதிப்புகொடுக்கக் கூடியதும் பயனுள்ளதுமாக இருக்க முடியும். சமுதாயத்தில் சமமாய் இருந்து இலட்சியத்தில் பொருத்தமாய் இருந்து ஒரே கொள்கையை ஏற்றுக்கொண்ட மக்கள், அக்கொள்கை நடப்புக்குத் திட்டம் வகுப்பதில் தான் ஓட்டு எடுக்க வேண்டுமே ஒழிய, அதற்குத்தான் ஓட்டு ஏற்பட்டதே ஒழிய, அதுதான் ஜனநாயகமாகுமே தவிர, இனம், ஜாதி, சமயம், இலட்சியம், நம்பிக்கை ஆகியவற்றில் வேறுபட்ட மக்களை வலுத்தவன் அதிக எண்ணிக்கை உள்ளவன் ஆகியவர்கள் சேர்ந்து, இளைத்தவர்களையும் சிறிய எண்ணிக்கைக் கொண்டவர்களையும் அடக்கி ஆள ஏற்பட்டதல்ல.

உதாரணமாக "இனத்துக்கு ஆக சமயத்துக்கு ஆக கொள்கைக்கு ஆக உயிரை விடவேண்டும்" என்பது ஒரு சாதாரண அறிவுரைச் சொல். ஓட்டுக்கும் மெஜாரிட்டிக்கும் மதிப்பு இருக்கவேண்டும் என்று சொல்லப்படுமானால் உயிரை விட்டாவது நிலைநிறுத்த வேண்டிய-காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏது என்று கேட்கின்றோம்.

அன்றியும் கல்வி அறிவில்லாத மக்களிடத்திலும் மூடநம்பிக்கை உடைய மக்களிடத்திலும் மதத்தின் பேரால் ஏராளமாக பிரசாரம் செய்து ஏற்கனவே குரோத உணர்ச்சி ஊட்டப்பட்டிருக்கும் மக்கள் இடமும் இப்படிப்பட்ட காரியத்திற்கு ஓட்டு எடுத்தால் அந்த ஓட்டுகளில் நீதியாவது நியாயமோ நேர்மையான அபிப்பிராயமோ இருக்கமுடியுமா என்று கேட்கிறோம்

உதாரணமாக 2000-ம் மக்கள் உள்ள தொகுதியில் 1001 பேர் ஒரு பக்கமாகவும், 999 பேர் மற்றொரு பக்கமாகவும் ஓட்டு செய்துவிட்டால் இந்த 1001 பேருக்கு 999-பேர்களும் அடங்கியோ அல்லது அடக்கப்பட்டு இணங்கியோ இருக்கவேண்டியதுதானா என்றும் கேட்கிறோம். ஆகவே பாகிஸ்தான், திராவிடநாடு போன்ற அடிப்படையான மாற்றம் வேண்டிய முக்கிய காரியங்களுக்கு ஓட்டு என்பது ஏமாற்றுவதற்கும் இஷ்டத்திற்கு விரோதமாய் பலாத்காரமாய் அடக்கி ஆளுவதற்கும் தான் பயன்படலாமே ஒழிய நேரான நாணயமான வழியாக ஆகிவிடாது என்றே கூறுவோம்.

இரண்டாவது நிபந்தனை ஆகிய தேசிய சர்க்கார் என்னும் விஷயமும் தேர்தலில் வெற்றி பெற்றவர்களைக் கொண்டவர்களைக் கொண்டு மந்திரி சபையோ, நிர்வாக சபையோ அமைப்பது என்பதும் முன்னையது போன்றதே யாகும். தேர்தல் வெற்றியின் மூலமே பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவது என்றால் தேர்தல் முறை எப்படியிருந்தது என்று ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால் அதன் யோக்கியதையும் விளங்காமல் போகாது. தேர்தலுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டியது நேர்மையானதும் அவசியமானதுமாய் இருந்தால் "வெற்றி மேல் வெற்றி பெற்ற" காங்கரஸ்காரர்கள் பிரிட்டிஷாரை "வெளியில் போ" என்று ஏகமனதாய் சொன்னவுடன், அவர்களைப் பிடித்து சிறையில் வைத்துக் கொண்டு, அத்தப்பேச்சை வாப்பீசு வாங்கினால்தான் வெளியே விடுவேன் என்று சர்க்கார் சொல்லுவதின் கருத்து என்ன?

தேர்தலில் வந்தவர்களைக் கொண்டு தேசிய சர்க்கார் அமைத்துவிட்டால் அந்த சர்க்கார் தேர்தல் பெற்ற சட்டசபைக்கு அடங்கியது, அடங்காதது? அடங்கினால் அது எப்படி எல்லா கட்சி பிரதிநிதித்துவம் கொண்ட தேசிய சர்க்காராகும்? அடங்காவிட்டால் 1935ம் வருஷ சீர்திருத்தம் செத்துவிட்டது என்றும் ஜனநாயகம் பறந்துவிட்டது என்றும் தானே அர்த்தமாகும். அப்படி ஆகுமானால் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்தான் தேசிய சர்க்காரில் இருக்கவேண்டும் என்பதற்கு அர்த்தமென்ன? அவசியமென்ன? என்று கேட்கிறோம்.

ஆகையால் காந்தி ஜின்னா பேச்சு எப்படி முடிந்தாலும், அடிப்படையாக பிரிவுபட்டிருக்கும் பாமர மக்களுடையவும் ஓட்டும் தேர்தல் முடிவும் எப்படியிருந்தாலும் சர்க்கார் அதைப்பற்றி இலட்சியம் செய்யாமல் உள்ள நிலைமையை நன்றாய் உணர்ந்து அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும் என்பதோடு ஜின்னா சாயபும் பொறுப்பும் 'காரண்டி'யும் இல்லாதவர்களுடன் பேச ஏற்பட்டிருப்பதை மனதில் கொண்டு ஏமாந்து போகாமல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது மிகமிக அவசியமானதென்று சொல்லி முடிக்கிறோம்.

---

## 27-ந் தேதி மாநாடு

20-8-44ல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சேலம் மாநாடு 27-8-44ந் தேதிக்கு ஒத்திப்போடப் பட்டுவிட்டது. 27-ந்தேதியில் அவசியம் நடக்கும். ஏராளமான மக்கள் பிரதிநிதிகளாய்வந்து பெருத்த உற்சாகத்துடன் ஏகமனதாகத் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொடுத்து உடனே கிளர்ச்சி துவக்க வசதியையும் எழுச்சியையும் உண்டாக்கவேண்டியது அவசியம் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

மாநாட்டில் வரும் தீர்மானங்களில் திராவிடர் கழகம் திராவிடநாடு முதலிய தீர்மானங்களோடு தோழர்கள் பாண்டியன், அண்ணாதுரை ஆகியவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் திராவிடர்களுக்கு திராவிடநாட்டையும், சுயமரியாதையையும் முழு உரிமையையும், மேன்மையையும் அளித்து உலக சமுதாயத்திலேயே முதல் இடத்தை அளிக்கும் தீர்மானங்களாக இருக்கும்.

தோழர் அண்ணாதுரையால் அனுப்பப்பட்டிருக்கும் தீர்மானம் மற்றொருபக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

உலகம் பூராவும் "ஜஸ்டிஸ் கட்சி என்றால் சர்க்கார் அடிமைக் கட்சி, பட்டம் பதவிகளுக்கு சர்க்கார் காலைக் கட்டிக்கொண்டு தவம் செய்யும் மக்களைக் கொண்ட சுயநலக்கட்சி, கடுமையான நிர்வாகம் செய்யக்கூட தயங்கும் கட்சி" என்றெல்லாம் நம் எதிரிகளும் பாமரர்களும் சொல்லி எள்ளி நகையாட இடம் கொடுத்துக்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கொண்டிருக்கும் எல்லா தனிமைகளையும் பொசுக்கி சாம்பலாக்கும் தீர்மானமாகும்.

சிறை செல்லுவது காங்கரசாருக்குத்தான் முடியக்கூடியது என்ற பேச்சு இந்த எதிர்ப்பின் மூலம் அடிபட்டுப் போய் விட்டதுடன் வெற்றியும் பெற்றோம். அதுபோலவே இத்தீர்மானத்தின் மூலம் திராவிடர் கழகமும் உண்மைத் தியாகிகளையும் எவ்வித கஷ்ட நஷ்டங்களுக்கும் தலை கொடுக்கும் உண்மைத்தொண்டர்களையும் கொண்டது என்கின்ற தன்மை இந்திய முழுமைக்கும் விளங்கப்போகிறது. நமது சர்க்காருக்கும் நமக்கும் உள்ள சம்மந்தமும் சுயமரியாதை முறையில் மதிக்கத்தகுந்த முறையில் புதுப்பிக்கப்படும் என்பதில் தடையில்லை.

சர்க்காருக்கு நம்மைப்பற்றிய லட்சியம் இல்லாதிருந்ததற்குக் காரணம் நாம் சுயநலக்காரர்கள் என்றும், நம்மில் தனிப்பட்ட முறையில் யாரைவேண்டுமானாலும் சரிப்படுத்திக் கொண்டு கட்சிக்கு மதிப்பில்லாமல் செய்துவிடலாம் என்றும் கருதி இருந்ததும், நம்மில் பலரும் தங்கள் காரியத்துக்கு தனியே சர்க்காரை நெருங்கி கட்சியை மதிப்பில்லாமல் செய்து வந்ததும் ஆகும்.

இனி அவ்வாறு காரியங்களுக்கு இடமில்லாமல் 28-ந் தேதி முதல் நம் மாகாணமும், இந்தியாவும், பார்லிமெண்டும், வைசிராய் சபையும், நம் எதிரிகளும் மற்றும் ஜின்னா, காந்தி, மூஞ்சே, சவர்க்கார்களும் திராவிடர், திராவிட நாடு (திராவிடஸ்தான்) என்கின்ற பேச்சே பிரதானமாய் பேசுபவர்களாக ஆவதோடு திராவிடநாட்டுக்கு எல்லை குறித்தனுப்பு என்று நம்மைக் கேட்கவேண்டியவர்களாகவும் ஆகவேண்டிய நிலை ஏற்படும் என்பதில் ஆட்சேபணை இல்லை.

மற்றும் தோழர் பாண்டியன் அவர்களால் அனுப்பப்படும் தீர்மானங்களும் நம் வாலிபர்களுக்கு ஒரு நல்லுணர்ச்சியையும் நம் கட்சி உண்மையான திராவிடர் கட்சி என்கின்ற கருத்தை பொது ஜனங்களிடையும் திராவிடர்களுக்குத் தனிக் கட்சி என்பதற்கு சமாதானத்தையும் உண்டுபண்ணக் கூடியதாகும்.

அதாவது பாண்டியன் அவர்கள் தீர்மானம் சுயமரியாதைக் கொள்கைகள் யாவும் திராவிடர் கழகத்தின் சமுதாயக் கொள்கைகள் என்ற தத்துவத்தைக் கொண்டதாகும்.

இந்த இருவர் தீர்மானமும் நிறைவேறி திராவிடநாட்டுப் பிரிவினைத் தீர்மானத்தையும் உயிருடன்பிணைத்து நிர்மாணித்துவிட்டோமானால் பிறகு அதை தடைசெய்யவோ காலந்தாழ்த்தவோ ஒரு அரசாங்கமோ ஒரு ஸ்தாபனமோ ஒரு சமுதாயமோ இருக்க முடியுமா என்பதை வாசகர்களே சிந்தித்துப்பாருங்கள்.

இயக்க வாலிபர்களே தோழர்களே எங்கே!

காட்டுங்கள் பார்க்கலாம்!!

உங்கள் சக்தியையும் வீரத்தையும்!!!

## இராசிபுரம் திராவிட இளைஞர் மாநாடு

இராசிபுரத்தில் ஓரியண்டல் நாடகக் கொட்டகையில் திராவிட இளைஞர் மாநாடு 22-8-44ல் நடைபெறும்.

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைவர்.

பெரியார், ஈ. வெ. ரா. திறப்பாளர்.

பிரபல வியாபாரி தோழர் பி.எ. சித்தப்ப செட்டியார், வரவேற்புக் கழகத் தலைவர்.

தோழர் தெய்வசிகாமணி,
காரியதரிசி.

## ஈரோட்டில் 'சிந்தனார்'

கோவை ஜில்லா திராவிடர் கழக நிதிக்காக 3-9-44-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10-30 மணிக்கு பார்க்பிச்சர் பாலஸ் தியேட்டரில் (டவுன் டாக்கீஸில்) பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் கலைச்செல்வ அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் "சிந்தனார்" காலட்சேபம் நடத்தப்படும்.

க. அர்ச்சுனன், தலைவர்.
என். ஆர். சந்தானம்,
பி. பழனிச்சாமி, செயலாளர்கள்.

## பெரியார் ஈ. வெ. ரா.

ஈரோடு: பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் திருவாரூர் 'சந்திரோதய' நாடகத்தில் கலந்து கொள்வதற்காக 17-ந் தேதி இவ்விடமிருந்து புறப்பட்டுச் சென்றார்.

## கோவை சுயமரியாதை வாலிபச் சங்கம்

9-8-44ந் தேதி சங்கக்கட்டிடத்தில் மாலை 7-மணிக்கு டி. கேசவலு தலைமையில் நடந்த கூட்டத்தில், செப்டம்பர் மாதம் இரண்டாவதுவாரத்தில் கோவை ஜில்லா சுயமரியாதை வாலிபர் மாநாட்டை கோவையில் கூட்டுவதென்றும் மகாநாட்டிற்கு வேண்டிய காரியங்களை உடனே செய்ய கமிட்டிமெம்பர்களை கேட்டுக்கொள்கிறது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## திருச்சியில் திராவிட மாணவர்கள் முழக்கம்

திருச்சி வன்னியடி மைதானத்தில் (கம்யூனிஸ்ட் ஆபீசுக்கெதிர் மைதானத்தில்) தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் திராவிட மாணவர்கள் பொதுக்கூட்டம் 31-7-44, 5-8-44 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்றது. அதில் தோழர்கள் டி. பி. எஸ். மணி, சாக்கியன், பார்த்திபன், டி. கே. சீனிவாசன், ஏ. கே. பாட்சா, பொன்மலை நாராயணசாமி முதலியோர் பொதுவுடமைக் கட்சிக்கும், திராவிடர் இயக்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கினார்கள்.

## தஞ்சை திராவிட வாலிபர் கழகம்

6-8-44ந்தேதி மாலை 6 மணிக்குத் தஞ்சை கருந்திட்டைக்குடியில் தோழர் பி. ஆர். மீனாட்சிசுந்தரம் எம். ஏ. தலைமையில் கரந்தைத் தமிழ்ப்பெரு மன்றத்தில் தோழர் கே. எஸ். பெரியசாமிப் புலவர் கழகத்தைத் திறந்து வைத்தார்.

## நெல்லை மாவட்ட மாநாடு

நெல்லை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் 17வது மாநாட்டு கமிட்டிக் கூட்டம் 7-8-44 இரவு 8 மணிக்கு கோவில்பட்டி ஆ. தி. ச. சீர்திருத்த சங்க மண்டபத்தில் சங்கக் காரியதரிசி தோழர் அம்ரோஸ் அவர்கள் தலைமையில் கூடி மாநாட்டை இம்மாத இறுதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

குறிப்பு: மாநாட்டுக்கு நன்கொடை அனுப்புவதாக வாக்குக்கொடுத்தவர்களும் டிக்கட் பெற்றவர்களும் 18-8-44 ஆந்தேதிக்குள் பணம் அனுப்பித்தரக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

திருச்சி: 4-8-44ந் தேதி தோழர் வி. சிவபிச்சை தலைமையில் நடைபெற்ற ஆதிதிராவிட மக்கள் கூட்டத்தில் திருச்சி ஜில்லா ஒடுக்கப்பட்டோர் நன்மைக்கழகம் ஒன்று தோழர் சிவபிச்சையவர்களைத் தலைவராகக் கொண்டு நிறுவப்பட்டது.

* *

வாளாடி: 7-8-44ந் தேதி தோழர் மாணிக்க நாட்டார் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் சேலத்தில் நடக்கும் ஜஸ்டிஸ் மாநாட்டிற்கு தோழர் எஸ். சோமசுந்தரம் அவர்களைப் பிரதிநிதியாக அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

* *

புதுக்கோட்டை: இக்பால் வாலிபர் சங்கத்தின் இலவச புஸ்தக விளியோகிப்பு விழா 31-7-44-ஆந் தேதி சமஸ்தான முதலாம் கௌன்சிலர் ஜனாப் கான்பகதூர் பி. கலிபுல்லா சாஹெப் பகதூர் எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

* *

குளித்தலை: தமிழ் மாணவர் கழகத்தின் ஆதரவில் நடைபெறும், 'அன்பு மலரின்' வெளியீட்டு விழா 2-8-44-ஆந் தேதி தோழர் எஸ். லெக்ஷ்மணஞ் செட்டியார் பி. ஏ., பி. எல்., தலைமையில் நடைபெற்றது. தோழர் எ. பி. ஜெயராம் பி. ஏ., 'மலரை' திறந்து வைத்தார்.

* *

தாராவி: பம்பாய்: தமிழ்நாடு பகுத்தறிவு நிலையத்தின் 7-வது மாதாந்திரக் கூட்டம் 30-7-44-ஆம் தேதி தோழர் சீன். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. தாராவி லேபர் வெல்பேர் சென்டரில் திராவிடர் பத்திரிகைகள் வரவழைக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

* *

அம்பிகாபுரம்: அம்பிகாபுரம் ஆதிதிராவிட வாலிப அண்ணாதுரை பகுத்தறிவு கழகத்தின் கூட்டம் 4-8-44 திருநெல்வேலி தோழர் ஈ. பிரமநாயகம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நெல்லை ச. ம. சங்கம், தெ. இ. ந. உ. சங்கம் ஆகியவைகளை ஒன்றாக சேர்த்து "திராவிடர் கழகம்" என்று பெயரிடவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

* *

நாகப்பட்டணம்: 30-7-44ல் தோழர் ஆர். யு. கோபால் தலைமையில் நடைபெற்ற திராவிடர்க்கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், 3-மாதங்களுக்குமேல் சந்தா கொடுக்காதவர்களை நீக்குவதென்றும், கழகத்தின் நிதியை தலைவர் தோழர் ஆர். யு. கோபால், [illegible] தோழர் [illegible] [illegible]

சாலை கோவாப்பரேட்டிவ் பாங்கில் போட்டுவைக்க அதிகாரமளிக்கப்பட்டது.

* *

கொழும்பு: திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நெல்லை ஜில்லா "ஆதிதிராவிட ஆரம்பபாடசாலை நிதிக்காக 9-7-44ந் தேதி தோழர் வி. விசுவநாதன் ஐ. சி. எஸ் தலைமையில் தோழர் எ. ன். பாச்சன் பாகவதர் கோஷ்டியாரின் "தமிழிசை" கச்சேரி நடைபெற்றது.

* *

திருச்சி: திருச்சித் தமிழ் இலக்கியக் கழக ஆதரவில் 23-7-44 ந்தேதி தோழர் தி. பொ. மாணிக்கவாசகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சென்னைப்பல்கலைக் கழகத்தார் சங்கீத சிரோமணிப் பட்டத்திற்கு மிகுதியான தெலுங்கு பாடல்களை அமைத்திருப்பது பெரிதும் வருந்தத்தக்கது என்றும் 50 சதவிகிதமாவது தமிழ்ப் பாடல்களாக அமைக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

புதுச்சுரண்டை: ஆதிதிராவிட சமூக முன்னேற்ற சங்கக்கூட்டம் 23-7-44ந் தேதி தோழர் எ. மாணிக்க வாசகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மணி பாகவதர், சண்முகம் முதலியவர்கள் பேசியபின் டாக்டர் அம்பேத்கார் மீது நம்பிக்கையிருப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

தூத்துக்குடி: சண்முகபுரம் பிராப்பர் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கக் கூட்டம் 30-7-44ல் தோழர் வே. வ. த. ரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசியபின் சென்னை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தியிருக்கும் "சங்கீத சிரோமணி" வகுப்புப்பாடத் திட்டத்தில் 100க்கு 90 பாடல்கள் தமிழில் இருக்கவேண்டுமென கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

கோலார் தங்கவயல்: 23-7-44ல் தோழர் எம். சி. துரை தலைமையில் நடைபெற்ற சமாஜ சேடியூல்டு வகுப்பினர் கழகக் கூட்டத்தில் கழக உறுப்பினர் தோழர் ஆர். ஜான்புல்லின் பாட்டியார் இயற்கையெய்தியதற்கு வருந்தியும் சென்னை சிவில சப்ளை தொழிலாளர் பாதுகாப்பு மெம்பராக தோழர் மீனாம்பாள் சிவராஜ் தெரிந்தெடுத்திருப்பதைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

சேலப்பாளையம்: [illegible] சேலப்பாளையம் [illegible] [illegible]

# சேலம் மாநாடு

## 27-8-44-ந் தேதி

## கண்டிப்பாய் நடைபெறும்.

எஸ். எம். சாமிநாதன் தலைமையில் 23-7-44-ஆம் தேதி நடைபெற்றது. சீர்திருத்தம் என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள். தோழர் பி. கே. அய்யா ஆத்தோரம் என்பது பற்றிப் பேசினார்கள்.

*   *

பொள்ளாச்சி: 26-7-44-ஆம் தேதி சேரிபாளையம் கிராமத்தில் தோழர் பி. என். இராமனுசம் தலைமையில் நடைபெற்ற தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் தஞ்சை தோழர் கோவிந்தராஜுலு சுயமரியாதைக் கொள்கையும் தொழிலாளர்களும் என்பது பற்றிப் பேசினார்.

*   *

கரூர்: மருத்துவர் சங்கக் கூட்டம் 19-7-44-ஆம் தேதி வஞ்சியம்மன் கோவில் அருகில் தோழர் சிரங்க மருத்துவர் தலைமையில் நடைபெற்றது. 'தற்கால நிலை' என்பது பற்றி ஈச்சம்பட்டி ராமசாமி பண்டிதர், டி. எஸ். பெரியண்ணன், எஸ். மாணிக்கம் முதலியவர்கள் பேசினார்.

*   *

கடையநல்லூர்: சுமாலியா முஸ்லிம் சங்கக் கூட்டம் 21-7-44-ல் தோழர் கே. எஸ். ஷேக்முஹய்தீன் சாஹிப் தலைமையில் கூடியது. காலஞ்சென்ற நவாப் யார்ஜங் பஹதூர் அவர்களின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

*   *

தஞ்சை: 9-8-44ல் நடைபெற்ற தஞ்சை திராவிட வாலிபர் கழகச் செயற்குழுவினர் கூட்டத்தில் தோழர்கள் கோ. சி. பெரியசாமிப் புலவர் தலைவராகவும், எம். நடராசன், அ. குழந்தைவேல் ஆகிய இருவர் அமைச்சர்களாகவும், வி. கே. அருணாசலம் பிள்ளை பொருளாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

*   *

கோவை: பாத்திர வியாபாரிகள் சங்க ஐந்தாவது ஆண்டு விழா மருதமலையில் 7-8-44-ஆம் தேதி திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சுப்ரமணியம், ராமசாமி நாயுடு, சாமிநாத செட்டியார் ஆகியோர் சங்க வளர்ச்சி பற்றிப் பேசினர். தோழர் சி. வி. சௌந்திரராஜுலு வந்தனம் கூறினார்.

*   *

திருப்பணிகருசல்குளம்: (திருநெல்வேலி ஜில்லா) ஆ. தி. க. அ. சங்கக் கூட்டம் கொழும்பு கொன்பெட்டி 618 தெ. அறையில் 7-8-44-ஆம் தேதி நடந்தது. மேற்படி கிராமத்தில் ஓர் வாசகசாலை திறவ நன்கொடையளித்த அன்பர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.
[illegible]

# ஈரோடு உண்மை விளக்கம் கல்வி நிலையம்

## தோழர் மணியம்மை சொற்பொழிவு

ஈரோடு உண்மை விளக்கம் கல்வி நிலையத்தில் மாதர் சங்கத்தைத் திறந்து வைத்த தோழர் மணியம்மை சொற்பொழிவு:

தலைவரவர்களே, தாய்மார்களே, தோழர்களே!

இன்று மாதர் சங்கத்தை இக்கல்வி நிலையத்தின் சார்பாகத் திறந்து வைக்கும் பெருமை எனக்கு அளித்ததற்கு நன்றி செலுத்துகிறேன். மாதர் சங்கமென்பது ஒவ்வொரு ஊரிலும் தனியாக ஒன்று இருக்கவேண்டியது அவசியமாகும். நம்நாட்டு மாதர்களுக்குச் செய்யவேண்டிய நலன்களுக்கு மாதர்கள் ஆண்களையே எதிர்பார்க்கிறார்கள். ஆண்கள் தங்கள் அடிமைகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியும்? தங்களுக்கு நல்ல அடிமையாய் இருப்பதற்கு ஏற்ற நன்மைதான் செய்ய முடியும். அதனால்தான் இந்த 20-வது நூற்றாண்டிலும் மற்ற நாட்டுப் பெண்மணிகள் ஆகாயக்கப்பல் விடவும், பட்டாளத்தில் சேவிக்கவும், கல்விமந்திரியாக இருக்கவும், ஆன நிலை ஏற்பட்டும் நம் நாட்டு நிலை ஆண்களுக்கு வாய் ருசிக்க சமைப்பதும் மெய் சிலிர்க்க கொஞ்சுவதுமான நிலை இருந்துவருகிறது. நம் நாட்டுப் பெண்மணிகளின் திறமை எல்லாம் தங்களை ஆண்கள் மெச்சும்படி ஆசை கொள்ளும்படி அலங்கரித்துக் கொள்ளவும், தங்கள் ஆண்களுக்கு கடமைப்பட்டு நன்றிசெலுத்தும்படி விலை உயர்ந்த நகைகளும் புடவைகளும் அணிந்து கொள்ளவுமே ஆகிவிட்டது. பெண்கள் படிப்பு விஷயம்கூட நம்நாட்டுப் பெண்களுக்கு படிப்பு தேவை இல்லை என்றே எனக்கு தோன்றுகின்றது. ஏனெனில் படித்த பெண்கள் என்ன செய்கிறார்கள்? பெரும்பாலும் சமையல் தான் செய்கிறார்கள். ஆகவே "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்பது நியாயமான பேச்சேயாகும். சமையல் செய்வதற்குத்தபடியே தங்கள் பெண்களை பயன்படுத்தும் பெண்களுக்கு பெற்றோர்கள் அதிகப் படிப்பளிப்பது நாட்டின் செல்வம் நேரம் ஊக்கம் பாழ்செய்யப்படுவதாகும்.

ஆதலால் பெற்றோர்கள் தெரியாமல் கல்வி கற்றுக் கொடுத்துவிட்டாலும் கல்வி கற்ற பெண்கள் கண்டிப்பாய் சமையல் வேலைக்கும் போகக்கூடாது, சமையல் வேலைக்கும் குடும்ப நிர்வாகத்திற்கும் என்றுமாத்திரம் நன்றாய் படித்த பெண்களைப் பயன்படுத்த பெற்றோர்கள் கல்யாணம் செய்வார்களானால் கண்டிப்பாய் படித்த பெண்கள் கல்யாணத்தை மறுத்துவிட வேண்டும். பெற்றோர்கள் கட்டாயப்படுத்தினால் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறிவிடவேண்டும். நாம் படிப்பது நல்ல அடிமை ஆகவா மேன்மையும் விடுதலையும் பெறவா யோசியுங்கள். 10 பெண்களாவது ஓடினால்தான் பெற்றோர்கள் நம்மை நன்றாக நடத்துவார்கள். ஆதலால் பெண்கள் சுதந்திரத்திற்காகப் படிக்கவேண்டும். படித்த பெண்கள் அடிமை ஆகக்கூடாது. இதற்கு மாதர் சங்கம் பயன்படவேண்டும் என்று சொல்லி இச்சங்கத்தைத் திறந்து வைக்கிறேன்.

---

மைசூர்: சிவராம்பேட்டை சோயமுத்தூர் ஜில்லா தமிழ் வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் 11-8-44-ஆம் தேதி தோழர் எம். ராமசாமி பண்டாரம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் சென்னை தோழர் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் தமிழர் சமயமும் வாழ்க்கையும் என்பது பற்றிப் பேசினார்.

*   *

கோனாபட்டு: திராவிடர் கழகச் சார்பில் வித்துவான் தோழர் வீசு திருநாவுக்கரசு தலைமையில் 13-8-44-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில், சங்கீத சிரோமணிப் பாடத் திட்டத்தைக் கண்டித்துத் தோழர்கள் சுப. இராமநாதன் பி. ஏ., (ஆனர்ஸ்) ஆசிரியர் இராம சண்முகம், மு. சு. இராமசாமி, ச. சுப்பிரமணியன் (மதுரை) ஆகியோர் வன்மையாகப் பேசிய பின் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

*   *

பம்பாய், நான்குநேரி தாலூகா ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் 2வது கூட்டம் 30-7-44 ஆம் தேதி தோழர் பி. எம். பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. எஸ். டி. ராஜா, டி. டி. சி. துரை ஆகியவர்கள் பேசியபின் சங்கத்திற்குக் கமிட்டி மெம்பர்களும், [illegible] தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## தேவேந்திர வேளாள மாநாடு

கோவை ஜில்லா தேவேந்திர வேளாள மாநாடு அவினாசியில், 13-8-44 பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், குரு. ராமலிங்கம், வி. வீராசாமி, கே. மருதாசலம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

த்து வைத்தியம் செய்விப்பதுமேயாகும். அப்படி வந்தால் இந்திய வைத்தியத்தின் கதி என்னவாகும். நம்மையும் நம் வைத்தியத்தையும் அடியோடு நாட்டை விட்டு ஓட்டுவது தான். ஆதலால் நீங்கள் ஏமாந்துவிட்டு பின் விழித்து தும்பைவிட்டு வால்பிடிக்காதிருக்க எச்சரிக்கிறேன்:

Central Board of Indian Medicine சில உருவான வேலைகளைச் செய்திருக்கின்றனர். ஏப்ரல் மாதம் 7-ந் தேதி மேன்மைதங்கிய சென்னை கவர்னர் பெருமானவர்களைக்கண்டு நம் சங்கடங்களை வெகுவாக எடுத்துரைத்துள்ளோம். அதற்கு அவர் செவிசாய்த்து சிற்சில விஷயங்களை சீர்திருத்தி இருக்கிறார். இந்த கவர்னர் பெருமானின் காலத்திலேயே நமக்கு வேண்டியதை நாம் செய்துகொள்ள வேண்டும்.

இந்த யுத்தகாலமானது ஆங்கில மருத்துவருக்கும் நமக்கும் நல்ல சந்தர்ப்பத்தையளித்துள்ளது. ஆனால் ஆங்கில வைத்தியர்கள் அதை உபயோகித்துக் கொள்கின்றனர். நாம் உபயோகித்துக்கொள்ளவில்லை. ஒவ்வொரு யுத்தத்தின் பயன் தான் வைத்தியத்தின் பெருமிதமான முன்னேற்றமென்று நீங்கள் உணர வேண்டும். ஆங்கில வைத்தியத்தில் சென்ற 3-வருடங்களுக்குள்ளே அநேக புதிய மருந்துகளும், சிகிச்சைகளும், ஆராய்ச்சியும் மலிகி வந்திருக்கின்றன. அவற்றை கையாளும் அவகாசமும் அவர்களுக்கே. Pennycylin என்பது ஒரு காளான். அக்காளானிலிருந்து உயிருக்கு மிகவும் அவசியமான ஒரு புது மருந்தை கண்டுபிடித்து பிரயோகிக்கின்றனர். மின்சார சிகிச்சையிலும் முன்னேற்றமடைந்திருக்கின்றனர்.

நம் மருந்துகளையும் சுலீசாகவும் எல்லோரும் கையாளவும் செய்து, நன்றாய் விளம்பரப்படுத்தி, பொதுஜனங்களிடமும் செல்வாக்குபெற முன்வர வேண்டும்.

தஞ்சையில் மற்றொரு ஆலோபதி மெடிகல் காலேஜ் வைக்கப் பிரயத்தனம் நடக்கிறது. நாம் வெகுநாளாக தஞ்சையிலாவது மதுரையிலாவது மற்றொரு இந்திய வைத்திய கல்லூரி வேண்டுமென பிரயத்தனம் செய்துவருகிறோம். அதற்கு ஒருவித சௌகரியமும் கிடைக்கவில்லை. திருவிதாங்கூரில் அகில திருவிதாங்கூர் சித்தவைத்திய சங்கத்தின் தலைவர் சுவாமி நித்தியானந்தர் அவர்களால் தன் சொந்த முயற்சியினாலே ஒரு கல்லூரி இயக்கி, அதற்கு 4-வருட பாடங்களும் அதற்கேற்ற கரிகுலமும் உண்டாக்கி நடத்தி வருவது பார்க்க, நம் போன்றவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லையேயென்று வெட்கப்படுகிறேன். இவர் உண்மை தியாகமூர்த்தி. அதற்கென உயிர்வாழ்பவர்.

அகில இந்திய சித்த வைத்திய சங்கம் சென்னையில் நிறுவி 13-வருடங்களுக்கதிகமாகிறது. மதுரை சித்த வைத்திய சங்கம் நிறுவி 17-வருடங்களாகின்றன. இன்னம் பல சங்கங்கள் பல விடத்திலும் உண்டு. எல்லாவற்றையும் ஒன்று சேர்க்க வேண்டும். அகில இந்திய வைத்திய சங்கமென்பது சென்னையிலிருக்கிறது. அதை அரசாங்கத்தார் மதிக்கிறார்கள். அதை தலைச் சங்கமாகக் கொண்டு ஏனைய சித்த வைத்திய சங்கங்கள் ஒத்துழைத்தால், இன்னும் மூன்று வருடங்களுக்குள் சித்த வைத்தியமும், சித்த வைத்தியர்களின் நிலைமையும் மிகவும் முன்னேற்றமடைவதல்லாமல், ஒவ்வொரு 5 மைலுக்கும் ஒரு சித்த வைத்திய ஆஸ்பத்திரியை காருண்ய முள்ள கவர்மெண்டார் Bhore Committeeயின் சிபார்சை கைக்கொண்டு வருமுன்பே நாம் நமது திட்டத்தைக் கொண்டு வந்து ஏறக்குறைய 30,000 (முப்பதாயிரம்) சித்த வைத்தியர்களையும் ரிஜிஸ்டர் செய்து அவ்வைத்தியர்களைக் கொண்டே இந்த ஆஸ்பத்திரிகளை நடத்திக் காண்பித்துவிடலாமென்று நான் தைரியமாகச் சொல்லுவேன். நீங்கள் ஒற்றுமைப்படுங்கள்! இன்னும் நம்மில் அநேகர் ரிஜிஸ்தர் செய்யாமலிருக்கிறார்கள். அவர்களையும் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று முயற்சி செய்துள்ளோம். அதுகைகூடும். உங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

### உணவுப் பிரச்சினை

இது மிகவும் முக்கியமானது. நம் நாட்டின் தற்போது சத்துள்ள தாதுப் பொருள்களுள்ள உணவு இல்லாமையே அபரிமிதமான வியாதிகளுக்குக் காரணம். நல்ல பால், தயிர், மோர், நெய், எண்ணெய், காய்கறிகள், பழ வகைகள் எண்ணெய் ஸ்நானம் தேவை. கொஞ்சகாலமாக நாகரீக உணவு, காபி, டீ முதலியவை நம் ஆகாரங்களில் நன்றாய்க் காலூன்றி விட்டதால்; நம் புராதன முறைகளை கை விட்டதே இச்சீர்கேடான வியாதிகளை உண்டாக்க காரணம்.

சுருக்கமாகக் கூறுமிடத்து, ஒரு மத்திய ஸ்தாபனம். ஒரு ரஸாயனசாலை (Laboratory) மற்றொரு இந்திய வைத்திய பள்ளிக்கூடம் மதுரையிலோ அல்லது தஞ்சையிலோ, ஒரு சென்ட்ரல் கோவாபரேடிவ் மெடிகல் ஸ்டோர்ஸ் (Central Co-operative Medical Stores) ஒரு பப்ளிசிடி ஆபீஸ் (Publicity Office) இவ்வளவும் வேண்டும்.

நம்மை இங்கே ஒருங்கு கூட்டி தன்னலம் பாராது சித்த வைத்தியத்தைப் பரப்ப முயன்றுவரும் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கரவர்களை நான் என் மனமாரப் போற்றுவதுடன், என் சார்பாகவும் உங்கள் சார்பாகவும் வந்தனமளிப்பதுடன் வரவேற்பு கமிட்டியார்களுக்கும், உங்களுக்கும் என் வந்தனமுரியது.

## ஈரோடு உண்மை விளக்கம் கல்வி நிலையம்

### பெரியார் தலைமை வகித்தார்

12-8-44 தேதி மாலை 7 மணிக்கு "ஆச்சி விலாஸ்" கட்டிடத்தில் டை நிலைய இரண்டாவது ஆண்டு விழா சிக்கட்சித் தலைவர் பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தாய்மார்கள் பலர் வந்திருந்தனர். மாணவ, மாணவிகளால் புதுமைக் கருத்துக்கொண்ட பாடல்கள் பாடப்பட்டன. நிலைய மானேஜர் தோழர் எஸ். பழனியப்ப பிள்ளை வரவேற்பு உரையாற்றினார்.

தலைவர் முன்னுரைக்குப்பின் ஈரோடு ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் தோழர் என். ரங்கசாமி பி. ஏ. எல். டி. ரேடியோ திறப்புவிழா வாற்றினார். தோழர் கே. ஏ. மணியம்மையார் மாதர் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் தோழர் எம். ஆர் பெருமாள் எம். ஏ. எல். டி. நாகம்மையார் வாசகசாலையைத் துவக்கிவைத்தார். பெரியார் அவர்கள் டை வாசகசாலைக்கு சில புத்தகங்கள் நன்கொடையாக வழங்கினார்.

திருச்சி ரேடியோ நிலையத்தில் குழந்தைகள் நிகழ்ச்சிக்கு அதிக இடமளிக்கக் கோரி ஈரோடு ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் தோழர் கே. நாகராஜன் பி. ஏ. எல். டி. கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தலைவர் முடிவுரையில் தற்காலக் கல்வி நிலை, அமைப்பு முறை, அதற்காக ஏற்படும் செலவு, செலவுக்குத்தகுந்த பலனில்லாமை, நாட்டின் தற்குறித்தனத்தை ஒழிக்க எவ்வகையில் கல்விமுறை தேவை, பெண்கல்வி என்பவைகள்பற்றி விரிவாக அரியசொற்பொழிவாற்றினார்.

தோழர் பி. ஷண்முகவேலாயுதம் நன்றிகூற விழா இரவு 10-மணிக்கு முடிவுற்றது.

## அறிவிப்பு

முன்பு வெளியிட்ட இராமாயண ஆராய்ச்சி ஏழு காண்டங்களில், 7 காண்டமும் சேர்த்து வாங்குவோருக்கு ரூ. 1-12-0க்கு கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு என்று பிரசாரம் செய்து இருக்கிறோம். தற்சமயம் காகித விலை உயர்வை முன்னிட்டு டை 7 காண்டமும் ரூ. 2-3-0க்கு கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. மானேஜர்.




(1ம் பக்கத் தொடர்ச்சி)

முழக்கங்களாகவே இருந்தாக வேண்டும். களத்திலே கூடுகிறோம், கவனமிருக்கட்டும். உரிமைக் கனல் உலகெங்கும் சூழ்ந்துள்ள நேரத்திலே கூடுகிறோம் நினைவிலிருக்கட்டும்.

சமூகர் முன் சாய்ந்திடக்கும் இனத்துக்கு வாழ இடம், வாங்கித்தரும், காரியம் நம்முன் நிற்பது.

நேயர்களே! எவ்வழி சென்றால், உய்யும் வழி கிடைக்கும் என்பது பற்றி எண்ணித் துணியுங்கள். சேலம் வாருங்கள், செய்முறை இதுவெனக் கூறுங்கள். தன்மானத்தைத் தளரவிடாதீர்கள், தரணி ஆளும் தக்கோராகுங்கள்! அச்சமும் அறியாமையும் அழிந்தொழியச் செய்யுங்கள். ஆண்மையும் அறிவுடைமையும் ஆட்சிப் பீடத்தே அமரவையுங்கள்.

வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?—என்று கேட்கிறார் புரட்சிக் கவி. கூடாது! என்று தமிழன் பெருமூச்சுடன் பதிலுரைப்பதைத் தமது மனக்கண்ணால் காண்கிறார், கண்டதும் கோபம் பீறிட்டுக் கொண்டு கிளம்புகிறது. "கொலை வாளினை எடடா! மிகு கொடியோர் செயல் அறவே!" என்று கவி, கட்டளை பிறக்கிறார்.

வலியோர் எளியோரை வதை புரிவது கூடாது—இதனை ஒழிக்கக் கொலை வாளை எடடா! என்று கூறுகிறார் கவி. இதுவே தருணம். தன்மானப் போருக்கு தக்க இத்தருணத்திலே, சேலம் தளபதிகள், திராவிடத் தோழர்களை அழைக்கின்றனர். திராவிட இனம், தன்மானத்தோடு தனித்தாணியில் ஆண்டு இருப்பதா, திராவிடநாட்டிலேயே ஆரிய மேற்பார்வையின் கீழுள்ள ஆங்கில ஆட்சியிலே இருப்பதா? அன்றி எம்மானைப் பாடிவிட்டு இறப்பதா, இளைஞர்களே! எது செயல் வேண்டும், எம்முறை வகுத்தால் எது நடக்கும் என்பது பற்றி, சூதும் சூழ்ச்சியும் புகமுடியாத வளமான உமது மனத்திலே தோன்றும் நயக்கருத்தை, அச்சம் தயை தாட்சணியமின்றி எடுத்துக் கூற வாரீர் சேலம், என்று அழைக்கிறோம், அன்போடு, உரிமையோடு, சொல்லும் செயலும் வெல்லும் வகையுடையதாக உம்மிடம் அமைந்திருக்கிறது என்ற நம்பிக்கையோடு, செடலாறும் சிங்கங்கள் உள்ளனர் என்ற பூரிப்போடு. வாரீர் விரைந்து, சேரீர் ஒன்றாகச் சேலத்தில். உரிமைப் போர் நடாத்த இதுவே சரியான காலம், என்பதைச் சேலம், எடுத்துக் காட்டும் என்று நம்புகிறோம்.

## இராமனாதனார் கல்விக்கூடம்

குல்லை: ஷை கல்விக்கூட மாணவர் இலக்கியக்கழகத்தின் சார்பில் 16-7-44 தேதி தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் மதுரை வித்துவான் முருகேசன், வித்வான் சாமிநாதன், இராசவேலு, வித்வான் முத்தணைந்த பெருமாள் முதலியோர் பேசியபின், சென்னை பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் இசைப்புலமைக்குரிய "சங்கீத சிரோமணி" பாடத்திட்டத்தில் 100-க்கு 97-பங்கு தெலுங்கு பாடல்களாக இருப்பதை குறித்து வருந்துவதாகவும் 100-க்கு 50-பங்கும் தமிழ்ப் பாடல்கள் சேர்க்க வேண்டுமென்றும் இல்லையேல் 100க்கு 100 தமிழ்ப்பாடல்கள் கொண்ட ஒரு பாடத்திட்டத்தை ஏற்படுத்தி 'இசைப் புலவர்' அல்லது 'இசை வாணர்' என்ற பட்டத்தை அளிக்குமாறு பல்கலைக் கழக ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

## நீத்தார் நினைவுநாள்

பெங்களூர் திம்மையாரோட் கிராசில் 24-7-44 தேதி தோழர் டி. குரூஸ் அவர்களின் குமாரன் தோழர் லூயிஸ் டிகுரூஸ் அவர்களின் நினைவு நாள்வெகு சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. அதுசமயம் பெங்களூர் திராவிட வீரர் தோழர் பி. பார்த்தசாரதி காலட்சேபம் நடத்தினார்.

## செங்குந்தர் மாநாடு

செங்குந்தர் மஹாஜன சங்கத்தின் 27-வது மாநாடு பெருந்துறையில் செப்டம்பர் 1, 2 தேதிகளில் நடைபெறும்.

## திருச்சி ஜில்லா நீதிபதி

திருச்சினாப்பள்ளி ஜில்லா நீதிபதி தோழர் மீர் அமிருதீனுக்கு ஆகஸ்டு 10-ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 6-ஆம் தேதி வரையில் ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. ரஜாவுக்குப் பிறகு உத்தியோகத்திலிருந்து விலகுவார். சென்னை சுமால்காஸ் கோர்ட்டு பிரதம நீதிபதி தோழர் எம். ஏ. அலீம் திருச்சினாப்பள்ளி ஜில்லா நீதிபதியாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## தேவேந்திர வேளாள இளைஞர் கழகம்

திருநெல்வேலி ஜில்லா மேலப்பாளை யம் கிராமம் சருங்குளத்தில் 23-7-44ல் தோழர் கே. எஸ். சண்முகம் அவர்க ளால் ஷை கழகம் திறந்து வைக்கப் பட்டது. ஷை கழகத்திற்கு தோழர் கே. எஸ். சண்முகம் தலைவராகவும், வி. முத்தையா காரியதரிசியாகவும், கே. யாகோப் பொருளாளராகவும் தேர் தெடுக்கப்பட்டது.

## திருவாரூர் மாணவர் மன்றம்

திருவாரூர்: தமிழ்நாடு தமிழ் மாண வர் தலைமை மன்றத்தார் விடுத்துள் அறிக்கையில், நமது கழக உயர்நிலைப் பள்ளி (போர்டு ஹைஸ்கூல்) ஐந்தாம் உயர் வகுப்பு தமிழ்ப்பாட நூலில் தொ குக்கப்பட்டுள்ள புரட்சிக்கவி பாரதி தாசன் அவர்களின் 'வேண்டுதல்' என்ற பாட்டை தமிழ் கழகத்தார் புறக்கணித்து பாடப் பகுதியில் சேர்க்காதிருப்பதைக் கண்டித்திருக்கின்றனர்.

## திருச்சி ஞாயிறு இலக்கியக் கழகம்

திருச்சி: தோழர் டி. பாலசுந்தரம் பி. ஏ., தலைமையில் 5-8-44ல் நடை பெற்ற ஷை கழகக் கூட்டத்தில் தஞ்சை கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் பண்டிதர் தோழர் பி. ஆர். மீனாட்சி சுந்தரம்பிள்ளை எம். ஏ., 'இலக்கியமும் இளைஞரும்' என்னும் பொருள்பற்றி பேசினார்.

## சுயமரியாதைத் திருமணம்

30-6-44ல் டம்பாய் தெ. இ. ஆ. தி வாலிபர் கழகம், பெரியார் ஈ. வெ. ரா. வரவேற்புக்கமிட்டி ஆகிய இயக்கங்களின் காரியதரிசி, கே. எல. பாலகிருஷ்ணன் மேலநத்தம், தோழர் இ. சுடலைமுத்து அவர்களின் செல்வி, ராஜம்மாள் ஆகிய வர்களின் வாழ்க்கை ஒப்பந்தம், நெல்லை ஜில்லா, தமிழரியக்கத் தலைவர், ஏ. வி. முத்தையாபிள்ளை அவர்களின் தலை மையில் நடைபெற்றது.

## நினைவு நாள்

இரட்டணை: இவ்வூர் பிரபல பண் க்காரரும், சீர்திருத்த வாதியும், தன்மான இயக்கத் தோழருமான தோழர் ந. வி. மூத்துக்கிருஷ்ணா ரெட்டியார் மனை வியார் கிருஷ்ணம்மாளின் தந்தையார் நினைவு நாளை முன்னிட்டு 4, 5 6-8-44 தேதிகளில் ஆதிதிராவிடர் உட் பட ஏழைமக்களுக்கு சுமார் 2500 பே களுக்கு அன்னம் போடப்பட்டது.

Edited Printed and Published by N. Karivaradasw amy at the Tamilan Press, 42, [illegible] Street, Erode.